# February 21, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. வடகொ ரியாவில் மிக முக்கிய அரசியல் நிகழ்வான ஆளும் தொழிலாளர் கட்சியின் 9-ஆவது மாநாடு, அந்நாட்டுத் தலைநகர் பியாங்யாங்கில் பெரும் எதிர்பார்ப்புடன் தொடங்கியது.

(i) 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த மாநாட்டில், வடகொரியாவின் ராணுவ மற்றும் வெளியுறவுக் கொள்கைகள் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்படும்.

(ii) சுமார் 5,000 பிரதிநிதிகள் பங்கேற்கும் இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக, தனது 13 வயது மகள் கிம் ஜு ஏவை எதிர்கால அதிபராக கிம் ஜோங் உன் அதிகாரபூர்வமாக அறிவிக்கக்கூடும் என தென்கொரிய உளவு அமைப்புகள் கருதுகின்றன.

(iii) இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மாநாட்டின் தொடக்க உரையில், நாட்டின் கடந்த 5 ஆண்டுகள் பொருளாதார வளர்ச்சியை வலியுறுத்தி அதிபர் கிம் ஜோங் உன் பேசியதாவது:

- கரோனா பெருந்தொற்று காலத்தில் நடைபெற்ற முந்தைய 8-ஆவது மாநாட்டுக்குப் பிறகு, கடந்த 5 ஆண்டுகளில் நாடு தேக்க நிலையைக் கடந்து முக்கியப் பொருளாதார இலக்குகளை அடைந்துள்ளது.
- தன்னிறைவை மேம்படுத்து வதோடு, மற்ற உலக நாடுகளுடனான உறவுகளிலும், உலகளாவிய புவிசார் அரசியல் களத்தில் வட கொரியா மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது.

2. நாட்டின் நிகர பூஜ்ஜிய உமிழ்வு இலக்கை 2070-ஆம் ஆண்டுக்குள் எட்டுவதற்கு, போக்குவரத்துத் துறையில் அதிரடி மாற்றங்கள் அவசியம் என நீதி ஆயோக் தனது சமீபத்திய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

(i) இதன்படி, சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் டீசல் வாகனங்களின் பயன்பாட்டைப் படிப்படியாகக் குறைத்து, அதற்கு மாற்றாக சிஎன்ஜி, ஹைப்ரிட் மற்றும் மின்சார வாகனங்களின் பயன்பாட்டைத் தீவிரப்படுத்தப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

(ii) தற்போது 76 சதவீதமாக உள்ள பெட்ரோல் யன்பாடு 2070-இல் 29 சதவீதமாகக் குறையும். மின்சாரப் பயன்பாடு 45 சதவீதமாகவும், உயிரி எரிபொருளின் பயன்பாடு 20 சதவீதமாகவும் உயரும் என கணிக்கப்பட்டுள்ளது. எரிவாயு மற்றும் ஹைட்ரஜன் பயன்பாடு 90 சதவீதம் வரை அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(iii) இந்த இலக்குகளை அடைய, வாகனத் திறனுக்கான 'கஃபே' தரநிலைகளை கடுமையாக்குதல் மற்றும் பழைய வணிக வாகனங்களை அப்புறப்படுத்துவது போன்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவுள்ளது.

(iv) மேலும், பேருந்து, ரயில் போன்ற பொதுப் போக்கு வரத்து வசதிகளை மேலும் நவீனப்படுத்தி மேம்படுத்தவும் நீதி ஆயோக் பரிந்துரைத்துள்ளது.

3. அமெரிக்கா தலைமையிலான 'பேக்ஸ் சிலிக்கா' உத்திசார் கூட்டணியில் இந்தியா இணைந்தது.

(i) அரியவகை கனிமங்கள், செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றில் தங்குதடையற்ற விநியோகத்தைக் கட்டமைக்கும் நோக்கில் அமெரிக்கா தலைமையில் இந்தக் கூட்டணி டிசம்பரில் உருவாக்கப்பட்டது.

(ii) இதில் ஆஸ்திரேலியா, கிரீஸ், இஸ்ரேல், ஜப்பான், கத்தார், கொரிய குடியரசு, சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம், பிரிட்டன் ஆகியவை உறுப்பினர்களாக உள்ளன. கடந்த மாதம் இந்த கூட்டணியில் சேர இந்தியாவுக்கு அமெரிக்கத் தூதர் அழைப்பு இதையேற்று விடுத்திருந்தார். பேக்ஸ் சிலிக்கா கூட்டணியில் இந்தியா இணைந்துள்ளது.

(iii) ஒப்பந்தம் கையொப்பம்:

தில்லியில் ஏ.ஐ. தாக்க சர்வதேச உச்சி மாநாடு நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக பேக்ஸ் சிலிக்கா கூட்டணியில் இந்தியா இணையும் ஒப்பந்தம் கையொப்பமானது. இந்நிகழ்ச்சியில் மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், அமெரிக்க பொருளாதார விவகாரத்துறை இணையமைச்சர் ஜேக்கப் ஹெல்பர்க், இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் செர்ஜியோ கோர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

(iv) இந்தியா இணைந்தது முக்கிய நிகழ்வு:

இதுகுறித்து இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர் கூறுகையில், 'வர்த்தக ஒப்பந்தம் முதல் பேக்ஸ்சிலிக்கா கூட்டணி வரையிலும், பாதுகாப்பு துறை ஒத்துழைப்பிலும், இரு நாடுகளும் இணைந்து செயல்படுவதற்கு எந்த வரம்பும் இல்லை. பேக்ஸ் சிலிக்கா கூட்டணியில் இந்தியா சேர்ந்தது வெறும் சாதாரண நிகழ்வு இல்லை. மிகவும் முக்கியமான ராஜீய நிகழ்வாகும். இது இருநாடுகள் இடையேயான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும். இந்த ஒப்பந்தத்தின்கீழ் ஏ.ஐ. தொழில்நுட்பங்களை இந்தியாவுக்கு அமெரிக்காவால் வழங்க முடியும். இந்தியா திறமைசாலிகள் மிகுந்த நாடு. அதே நேரத்தில் தீவிரமான போட்டி நாடுகளையும் கொண்டுள்ளது' என்றார்.

4. புது தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இலங்கை அதிபர் அநுரகுமார திசநாயக இடையே இருதரப்பு சந்திப்பு நடைபெற்றது. அப்போது, இருநாட்டு உறவில் சமீபகாலங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து இரு தலைவர்களும் ஆலோசித்தனர்.

(i) தில்லி பாரத மண்டபத்தில் ஐந்து நாள்களாக நடைபெற்று வந்த சர்வதேச செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தாக்க உச்சி மாநாடு நிறைவடைந்தது. இந்த மாநாட்டில் பங்கேற்க வந்த உலகத் தலைவர்களுடன் பிரதமர் மோடி கடந்த இரண்டு நாள்களாக இருதரப்பு சந்திப்பில் ஈடுபட்டார்.

(ii) இலங்கை அதிபர் அநுரகுமார திசநாயக, ஸ்லோவேகியா அதிபர் பீட்டர் பெல்லேகிரினி, லிக்டென்ஸ்டைன் பட்டத்து இளவரசர் அலாய்ஸ், மோரீஷஸ் பிரதமர் நவீன்சந்திர ராமகூலம் ஆகியோரை பிரதமர் தனித்தனியாக சந்தித்துப் பேசினார்.

(iii) இதேபோல், ஐ.நா.பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட பிரதமர் மோடி, ஐ.நா. சீர்திருத்தங்கள், அனைவரையும் உள்ளடக்கிய ஏ.ஐ. தொழில் நுட்பம் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதித்தார்.

5. இந்தியா-அமெரிக்கா இடையேயான இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் வரும் மார்ச் மாதம் கையொப்பமாகி, ஏப்ரல் மாதம் முதல் செயல்பாட்டுக்கு வரவாய்ப்புள்ளது' என்று மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.

(i) மேலும், 'பிரிட்டன், ஓமன் நாடுகளுடனான இந்தியாவின் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் (எஃப்டி.எ) வரும் ஏப்ரலில் நடைமுறைப்படுத்தப்படும். நியூ ஸிலாந்து நாட்டுடனான வர்த்தக ஒப்பந்தம் வரும் செப்டம்பரில் நடைமுறைப்படுத்தப்படும்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ii) இந்தியா-அமெரிக்கா இடையே இருதரப்பு வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், இடைக்கால இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்துக்கான செயல் திட்டத்தை இரு நாடுகளும் கடந்த வாரம் இறுதி செய்தன.

(iii) இதுகுறித்த அறிவிப்பை இரு நாடுகளும் கடந்த 7-ஆம் தேதி கூட்டாக வெளியிட்டன. அதன்படி இருதரப்பு வர்த்தகத்தை ஊக்குவிக்கும் வகையில் ஏராளமான பொருள்கள் மீதான இறக்குமதி வரியை இரு நாடுகளும் குறைக்க உள்ளன.

(iv) இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது விதித்த 50 சதவீத கூடுதல் வரியை 18 சதவீதமாக அமெரிக்கா குறைக்க உள்ள நிலையில், அமெரிக்காவின் அனைத்து தொழில் நிறுவன பொருள்களுக்கும், உலர்த்தப்பட்டு காய்ச்சி வடிகட்டிய தானியங்கள், கால்நடைத் தீவனத்துக்கான சிவப்பு சோளம், மரக் கொட்டைகள், புதிய மற்றும் பதப்படுத்தப்பட்ட பழங்கள், சோயாபீன் எண்ணெய், ஒயின் உள்ளிட்ட மதுபானங்கள் உள்பட பரவலான அமெரிக்க உணவு மற்றும் வேளாண் பொருள்களுக்கும் இறக்குமதி வரியை இந்தியா வெகுவாகக் குறைக்க உள்ளது.

(v) இந்த இடைக்கால இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்துக்கான விதிமுறைகள் மற்றும் சட்டரீதியிலான இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கான மூன்று நாள் கூட்டத்தில் பங்கேற்க இந்தியக் குழு வரும் 23-ஆம் தேதி அமெரிக்கா செல்கிறது.

6. நாட்டில் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ், இணையவழி வர்த்தக ஏற்றுமதியாளர்களுக்கான கடனுதவி உள்பட மேலும் 7 நடவடிக்கைகளை மத்திய அரசு அறிவித்தது.

(i) ரூ.25,060 கோடி மதிப்பீட்டில் 10 முக்கிய அம்சங்களுடன் கூடிய ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை கடந்த ஆண்டு ஒப்புதல் வழங்கியது. மத்திய வர்த்தக அமைச்சகம், சிறு-குறு-நடுத்தர தொழில்துறை அமைச்சகம், நிதியமைச்சகம், இந்திய ஏற்றுமதி-இறக்குமதி வங்கி, ஒழுங்குபடுத்தப்பட்ட பிற கடனளிப்பு நிறுவனங்கள் உள்ளிட்டவை ஒருங்கிணைந்து செயல் படுத்தும் இத்திட்டத்தின்கீழ், கடந்த ஜனவரியில் மூன்று நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.

(ii) இந்நிலையில், மேலும் 7 நடவடிக்கைகள் மத்திய வர்த்தகம் அமைச்சகம் சார்பில் அறிவிக்கப்பட்டன.

(iii) புது தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நிர்யத் புரோத்ஸாஹன், நிர்யத் திசா ஆகிய இரு துணைத் திட்டங்களின்கீழ் இந்த நடவடிக்கைகளை மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் அறிவித்தார்.

(iv) மாற்றுமுறை பரிவர்த்தனைகளுக்கு ஆதரவு :-

- குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் ஏற்றுமதி செயல்பாடுகளில், வழக்கமான பரிவர்த்தனைகளுக்கு மாற்றாக ஆர்பிஐ மற்றும் சர்வதேச நிதிச் சேவை மையங்களின் ஆணையத்தால் (ஐஎஃப்எஸ்சிஏ) அங்கீகரிக்கப்பட்ட எண்ம நிறுவனங்களின் வாயிலாக மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகளுக்கு (தகுதியுள்ளவை) கட்டணத் தொகை மீது 2.75 சதவீத மானியம் வழங்கப்படும். இந்த மானியம் ஆண்டுக்கு ரூ.50 லட்சத்தை மிகாமல் இருக்கும்.

(v) இணையவழி வர்த்தக ஏற்று மதியாளர்களுக்கு கடனுதவி:

- வெளிநாடுகளுக்கு நேரடியாக இணையவழி வர்த்தகத்தில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு 90 சதவீத உத்தரவாத காப்பீட்டுடன் ரூ.50 லட்சம் வரை கடனுதவி வழங்கப்படும். வெளிநாட்டில் பொருட்களை இருப்பு வைக்கும் வசதியை கொண்ட நிறுவனங்களுக்கு 75 சதவீத உத்தரவாத காப்பீட்டுடன் ரூ.5 கோடி வரை கடனுதவி வழங்கப்படும்.

(vi) புதிய ஏற்றுமதி வாய்ப்புக ளுக்கான ஆதரவு:

- பகிரப்பட்ட இடர்ப்பாடுகளுக்கு இடையே புதிய மற்றும் சவால் மிகுந்த சந் தைகளை அணுகுவதற்கு நிறுவ னங்களுக்கு அரசு சார்பில் ஆத ரவு வழங்கப்படும்.

(vii) வர்த்தக ஒழுங்குமுறைகள், அங்கீகாரம், இணக்க ஆதரவு:

- சர்வதேச ஆய்வுகள், சான்றளிப்பு, பிற இணக்க ரீதியிலான தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஏற்றும தியாளர்களுக்கு ஆதரவளிப்பது. இதற்கான செலவுகளில் 60% மற்றும் 75% (இரு வகை பட்டியல் களுக்கு ஏற்ப) திருப்பியளிக்கப்படும். இந்த நிதி ஆதரவு, ஆண் டுக்கு ரூ.25 லட்சத்தை மிகாமல் இருக்கும்.

(viii) வெளிநாட்டுத் தளவாடங்கள், சேமிப்பு கிடங்குகளின் அணுகலுக்கான ஆதரவு:

- வெளிநாட்டுத் தளவாடங்கள், சேமிப்பு கிடங்குகளின் அணுகலுக்கு ஆதரவளிக்கும் வகையில், அதற்கான செலவினத்தில் 30 சதவீதம் வரை மூன்றாண்டுகளுக்கு நிதியுதவி வழங்கப்படும்.

(ix) சரக்கு-போக்குவரத்து தளவாட ஆதரவு:

- குறைந்த ஏற்றுமதி கொண்ட மாவட்டங்களில் செயல்படும் நிறுவனங்களுக்கு சரக்கு-போக்குவரத்து தளவாட ரீதியில் ஆதரவளிக்கப்படும். இது தொடர்பான செலவினத்தில் 30 சதவீதம் வரை திருப்பியளிக்கப்படும். இது, ஆண்டுக்கு ரூ.20 லட்சத்துக்கு மிகாமல் இருக்கும்.

(x) வர்த்தக நுண்ணறிவு மற் றும் வசதிகளுக்கான ஒருங் கிணைந்த ஆதரவு:

- ஏற்றுமதியாளர் திறன் மேம்பாடு, வர்த்தக நுண்ணறிவு அமைப்பு முறைகளின் மேம்பாட்டுக்கான திட்டச் செலவுகளில் 50 முதல் 100 சதவீதம் வரை நிதி ஆதரவு வழங்கப்படும்.

(xi) மத்திய அரசின் 7 நடவடிக்கைகள் குறித்து மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் கூறுகையில், 'அமெரிக்கா உள்பட 38 நாடுகள் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களின்மூலம் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கான சந்தை அணுகல் மிகப்பெரிய அளவில் விரிவடைந்துள்ளது.

(xii) உலகின் மொத்த உற்பத்தியில் (ஜிடிபி) சுமார் 70 சதவீதம் அதாவது உலக வர்த்தகத்தில் மூன்றில் இரு பங்கு வரையிலான அணுகல் இந்தியாவுக்கு கிடைத்துள்ளது. உலகளாவிய வர்த்தகத்தின் பலன், நமது சிறு-குறு-நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு கிடைக்கப் பெற வேண்டும் என்பதே மத்திய அரசின் நோக்கம். தற்போதைய நடவடிக்கைகள் மூலம் இந்திய நிறுவனங்களுக்கு புதிய சந்தைகளின் அணுகல் கிடைக்கும்' என்றார்.

(xiii) நடப்பு நிதியாண்டின் ஏப்ரல்-ஜனவரி காலகட்டத்தில் நாட்டின் ஏற்றுமதி 2.22 சதவீதம் உயர்ந்து 366.63 பில்லியன் டாலராகவும், இறக்குமதி 7.21 சதவீதம் உயர்ந்து 649.86 பில்லியன் டாலராகவும் பதிவானது குறிப்பிடத்தக்கது.

7. இந்தியாவிலும் உலக அளவிலும் பெண்களின் நிலம் மற்றும் சொத்துரிமைகள்.

(i) சமத்துவம் முதல் அடிமைத்தனம் வரை

- பண்டைய தமிழ் சமூகத்தில், பெண்கள் நிலம், நகைகள் மற்றும் கால்நடைகளை வைத்திருந்ததாகவும், பொருளாதார ரீதியாக சுதந்திரமான வாழ்க்கையை நடத்தியதாகவும் சான்றுகள் தெரிவிக்கின்றன.
- சங்க காலத்தில், வரதட்சணை (ஸ்ரீதானம்) ஒரு பெண்ணின் தனி மற்றும் பிரத்தியேக சொத்தாகக் கருதப்பட்டது.
- பல்லவர் மற்றும் சோழர் காலத்தில், "முதல்வரின் உரிமை" (மூத்த மகனின் உரிமை) என்ற கொள்கை முக்கியத்துவம் பெற்றது, மேலும் பெண்கள் குடும்ப சொத்தில் சம அந்தஸ்தை இழந்தனர்.
- மனுஸ்மிருதி போன்ற பிந்தைய வேத நூல்கள் பெண்களின் பார்வையை இணை உரிமையாளர்களிடமிருந்து ஆண் உறவினர்களால் பாதுகாப்பு தேவைப்படும் தனிநபர்களாக மாற்றியது, அவர்களுக்கு சுயாதீனமான சொத்து அந்தஸ்தை மறுத்தது.

(ii) இந்தியாவில் சட்ட அடையாளங்கள்

- இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956: இந்துப் பெண்களின் சொத்துரிமையை அங்கீகரித்த சுதந்திரத்திற்குப் பிந்தைய முதல் பெரிய சட்டம் இதுவாகும். 2005 ஆம் ஆண்டில், இந்தச் சட்டம் திருத்தப்பட்டது, இதன் மூலம் மகள்கள் தங்கள் திருமண நிலையைப் பொருட்படுத்தாமல், மூதாதையர் சொத்து மற்றும் விவசாய நிலத்தில் சம பங்குதாரர்களாக (சம பங்குதாரர்கள்) அறிவிக்கப்பட்டனர்.
- கேரள எல்லையில் வசிக்கும் சில தமிழ் குடும்பங்களில், தாய்வழி (மருமக்காதயம்) மரபுரிமை முறை

இன்றும் நடைமுறையில் உள்ளது.

(iii) உலகளாவிய தரப்படுத்தல்: ருவாண்டா மாதிரி

- இனப்படுகொலைக்குப் பிந்தைய சீர்திருத்தம்: 1994 இனப்படுகொலைக்குப் பிறகு, ருவாண்டா பெண்களின் நில உரிமைகளைப் பாதுகாப்பதில் உலகளாவிய தலைவராக மாறியது.
- சட்டமன்ற நடவடிக்கை: அவர்களின் 1999 வாரிசுரிமைச் சட்டம் மகன்கள் மற்றும் மகள்களுக்கு சம உரிமைகளை வழங்கியது, மேலும் 2005 நிலச் சட்டம் கணவன்-மனைவி இடையே கூட்டு நில உரிமையை கட்டாயமாக்கியது.

(iv) புள்ளிவிவர யதார்த்தம் மற்றும் உரிமைப் போக்குகள்

- நிலப் பதிவு: 2008 மற்றும் 2013 க்கு இடையில், தேசிய நிலப் பதிவுகள் நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், இந்தியாவின் 99% நிலங்கள் பதிவு செய்யப்பட்டன. 56 லட்சத்திற்கும் மேற்பட்ட நிலங்கள் கூட்டுப் பெயர்களிலும் 21 லட்சத்திற்கும் மேற்பட்ட தனிப்பட்ட பெண்களின் பெயர்களிலும் பதிவு செய்யப்பட்டன.
- NFHS தரவு: ஐக்கிய நாடுகளின் மக்கள்தொகை நிதியத்தின்படி (NFHS-4 மற்றும் NFHS-5 தரவுகளை ஒப்பிடுகையில்), இந்தியாவில் பெண்களின் தனிப்பட்ட நில உரிமை 7% இலிருந்து 8% ஆக உயர்ந்துள்ளது, அதே நேரத்தில் கூட்டு உரிமை 21% இலிருந்து 23% ஆக அதிகரித்துள்ளது.

(v) உரிமை இல்லாமல் "விவசாயத்தின் பெண்ணியமயமாக்கல்"

- விவசாயத் துறையில் பெண்கள் 75% க்கும் அதிகமான உழைப்பைப் பங்களிக்கின்றனர், இருப்பினும் அவர்கள் அரிதாகவே அவர்கள் உழைக்கும் நிலத்தின் சட்டப்பூர்வ உரிமையாளர்களாக உள்ளனர்.
- நடைமுறை vs. சட்டம்: உண்மையில், பாரம்பரியத்தின் மூலம் நிலத்தைப் பெறும் விதவைகளின் எண்ணிக்கை, சட்டப்பூர்வ சொத்துரிமைகள் மூலம் நிலத்தைப் பெறும் மகள்களை விட அதிகமாக உள்ளது.
- பொருளாதாரத் தடைகள்: PM-Kisan திட்டத்திற்குத் தகுதியான 8.7 கோடி விவசாயிகளில், 2 கோடிக்கும் குறைவானவர்கள் பெண்கள்.
- இணை சிக்கல்கள்: நில உரிமைகள் இல்லாமல், பெண்கள் நிறுவனக் கடன்கள், பயிர் காப்பீடு அல்லது அரசாங்க மானியங்களை அணுக முடியாது, மேலும் பெரும்பாலும் புதிய விவசாய தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதில் இருந்து விலக்கப்படுகிறார்கள்.

(vi) சமூக மற்றும் பொருளாதார தாக்கம்

- மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி: பெண்களின் நில உரிமையை அதிகரிப்பது மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் தேசிய விவசாய உற்பத்தித்திறனில் நேரடி அதிகரிப்புக்கு வழிவகுக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் கணித்துள்ளனர்.
- குழந்தை ஊட்டச்சத்து: கேரளாவில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வு, குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை தாயின் வருமானம் மற்றும் சொத்துக்களால் மிகவும் குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கப்படுகிறது என்பதைக் குறிக்கிறது.
- கொள்கை பரிந்துரை: பெண்கள் ரேஷன் கார்டுகளில் குடும்பத் தலைவிகளாகப் பதிவு செய்யப்படுவது போல, உணவுப் பாதுகாப்பு மற்றும் சமூக கண்ணியத்தை உறுதி செய்வதற்காக நிலம் கட்டாயமாக பெண்களின் பெயர்களில் பதிவு செய்யப்பட வேண்டும்.

சட்டங்கள் காகிதத்தில் இருந்தாலும், இந்த உரிமைகளை திறம்பட செயல்படுத்த ஒரு சரியான சமூக மற்றும் நிர்வாக உள்கட்டமைப்பு கட்டமைக்கப்படும் வரை அவை ஒரு "கனவாகவே" இருக்கும்.